338

Registered No. M. 2445.

17 JU 1931

உ

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம்
ஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள்
அருட் கொடையால்,
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற்
கழகத்தினின்று வரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க } விபவஆண்டு பங்குனித்திங்கள். 1929 — மார்ச்சு. { இதழ் ரு

க. காலத்தின் அருமையும் நமது கடமையும்:-
உ. கடவுள் வாழ்த்து :—
௩. வீரசைவ பஞ்சாசாரிய பீடங்களும், அவற்றின் தொன்மையும் :—
ச. ஐந்தாம் ஆண்டு விழாத் தலைவர் முன்னுரை.
ரு. வீரசைவம் :—
௬. ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீன பீடமும் அதன் பெருமையும் :—
எ. நமது பத்திரிகையைப்பற்றிய மதிப்புரைகள்.
அ. அட்டாபரணம் :—
௯. தென்னாட்டு நிகழ்ச்சிகள் :—

பத்திராசிரியர் { வீ. குமாரவீரய்யர், 'வீரசைவநிலையம்' முசிரி, திருச்சிஜில்லா.

விவேகபானு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

உ

ஸ்ரீபசவேசாய நம:

தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த மகா சங்கத்தாரின் அறிக்கை.

மாண்புமிக்க பெரியோர்களே !

இத்தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் நமது வீரசைவ சித்தாந்த மகாசங்கமானது ஆறுவருடங்களாகச் சிற்சிலவிடங்களில் தக்கார் தலைமையில் கூடித் தன்னரிய வேலையைச் செய்துவந்திருக்கின்றது. இதன்பயனாகவே இப்பத்திரிகையும் வெளிவருவதாயிற்று. சென்ற வருடத்தில் தலைமை வகித்த பெரியார் எடுத்துக்கூறிய முன்னேற்ற மொழிகள் இன்னவையென ஐந்தாவதாண்டுத் தலைவர் முன்னுரையென்பதிலிருந்து அறியலாம். அகில பாரத வீரசைவ மகாசங்கத்தாரும் தென்னாட்டில் வீரசைவ மாகாண மகாநாடு கூடுவது நலமென்றும், தாங்களும் வருதல் கூடுமென்றும் தெரிவித்திருப்பதால் நாகரீகமிக்க இக்காலத்தில் தென்னாட்டு வீரசைவர்களாகிய தமிழ் தெலுங்கு கன்னடம் பேசுவோரனைவரும் இனி அயர்ந்து தூங்காது விழித்தெழுந்து மாகாண மகாசபைகூடி சமயத்திற்கும் சமூகத்திற்குமான தீர்மானங்களைச் செய்தல்வேண்டும் என்றும் வடநாட்டிலுள்ள உயர்ந்த பதவியிலுள்ளாரைத் தலைவராகக் கொண்டு ரயில் முக்கிய வசதியுள்ள நகரத்தில் மகாசங்கத்தை நடத்தல்வேண்டும் என்றும், ஏப்ரல் முதலில் ஆலோசனைக் கூட்டமொன்று கூடப்பெறுமாதலால் ஒவ்வொரு பக்கத்திலுமிருந்து பிரதிநிதியாகவந்து சமூகசேவை செய்ய முற்படுவோர் மார்ச்சு முடிவிற்குள் இந்த நிலையத்திற்கு அறிவித்துக்கொள்ளவேண்டுமென்றும், மகாசங்கத்தை நடத்துவதற்கான ஆலோசனைகளைத் தெரிவிக்க வேண்டுமென்றும் இச்சங்கத்தார் வேண்டுகின்றார்கள்.

இங்ஙனம்,

வீ. குமாரவீரய்யர்,

தலைமைக் காரியதரிசி.

உ

சிவமயம்.

பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள்.

17 JUL 1981

இணையி றிருவள் ளுவப்பெயர்கொ ளெம்மான் கரப்பா ரிரவன்மி
னென்ன விரந்து மிரத்தக்கார்க் சாணி னிரக்க வென்றுரைத்து
முணர்வு தெருள்வித் தமைகொண்டே யொருவர் தமையு மிவ்வளவு
மொன்று மிரந்தா மல்லமியா முன்னை யின்றீங் கிரக்கின்று
மணையு மவர்தம் முகக்குறிப்பா னறிந்தங் கவர்த மகம்விழைந்த
வனைத்து மமுத முறழீர மளைந்த வின்சொ லுடனளிக்கு
முணையில் கொடைச்சிந் தாமணியே முகிலே முத்தந் தருகவே
முருகன் மயிலைச் சிவஞான முனிவா முத்தந் தருகவே,

ஸ்ரீ சிவஞானபாலயசுவாமிகள் திருவடிவாழ்க.

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலயதேசிகசுவாமிகள் அருட்கொடையால் தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற் கழகத்தினின்று வரும் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் ௧	விபவஆண்டு பங்குனித்திங்கள். 1929 — மார்ச்சு.	இதழ் ௩

காலத்தின் அருமையும் நமது கடமையும்.

தமிழ்த்தெய்வ வணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றுரியத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

(கருணைப்பிரகாச சுவாமிகள்)

அறிவாற் சிறந்துவிளங்கும் பெரியோர்களே!

காலம்என்பது அருவப்பொருள். அது உலகியல்நடத்தற்பொருட்டு ஆதித்தன் முதலிய அளவைகளால் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானாகக் கூறுபடாத தன்மையையுடையது. அதனைத் தருக்கநூலார், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு ஆன்மா, மனம் என திரவியம் ஒன்பதனுள் ஒன்றெனக்கூறிக் காலமாவது இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் வழக்கிற்கு ஏதுவாயிருப்பதெனவும், அது ஒன்றாய் வியாபகமாய் நித்தமாய் இருக்குமெனவும் விளங்கக்கூறுவர். காலம் இன்றேல் வினையும் இன்று. வினையின்றேல் ஒன்றற்குக் கருத்தாவென்னுந் தலைமையும் இன்று. ஆதலின் காலம்பற்றி நிகழும் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழிலால் காலங்கடந்தகடவுட்கும் கருத்தா என்னுந் தலைமை வருவதாயிற்று. இக்காலம் இடையறாது இயங்கிக்கொண்டிருத்தலின் உண்மை யுணர்வுடையார் இதனைக் காலச்சக்கரமெனவும் உருவகப்படுத்திக்கூறுவர். ஆனால் காலச்சக்கரத்திற்கும்

ஏனைய சக்கரத்திற்கும் வியக்கத்தக்க வேறுபாடுண்டு. உருவப்பொருளாகிய ஏனைய சக்கரமோ மக்களால் இயக்கப்பட்டு நாளடைவில் தேய்ந்தழியுந் தன்மையையுடையது. இக்காலச் சக்கரமோ தன்பாலகப்பட்ட மக்களதுஉடலைத் தோன்றி, பருத்து, வளர்ந்து, நின்று, இருந்து, கிடந்து, அழியும்படிச்செய்யவல்லது. இக்காலம் தான் கூறுபடாத நித்தியப் பொருளாயிருந்தும் நாழிகை, நாள், மாதம், வருடம் எனக்கூறுபட்டதாகக் காட்டித் தன்பாலகப்பட்ட மக்களது உடலை யிருந்தன்மையதாகிய வாளாயுதமாயிருந்தும் உணர்வில்லாராகிய பேதையரைக் காலங்கழிந்தது கழியாநின்றது என இருமாந்திருக்கும்படிச் செய்யவல்லது. இக்காலம் தன் கொலைக்குற்றத்தைத் தன்மேற் சுமத்திக்கொள்ளாது அறியாமையையுடைய மக்கள்மேற் சுமத்தித் தப்பித்துக்கொள்ளுந் திறமைவாய்ந்தது. ஆயினும் அறிவுடையார் விழிப்புடனிருந்து தம்காலத்தில் கணப்பொழுதையும் வீண்பொழுதாக்காது நல்வினையைச் செய்வாராயின் இந்நிலவுலகில் அழியாப் புகழை நிலைநாட்டி மறுமையில் துறக்க வின்பத்தையும், அதன்மேல் முத்தியையும் தரத்தக்க பெருமையும் வாய்ந்தது. மக்கள் அவிச்சைவயத்தால் தம் சில்வாழ்நாளையும், அதனிடேயேவரும் பல்பிணியையும் உணராது உறங்குவாராயினும் இக்காலமோ உறங்குதலின்றி விரைந்துசெல்லுந் தன்மையும் ஆற்றலுமுடையது. இதனுண்மையையறிந்த புலமைமிக்க பெரியார்,

> " நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
> வாள துணர்வார்ப் பெறின் " எனவும்,

> " நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
> தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
> சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
> வந்தது வந்தது கூற்று " எனவும்

பரிந்தும் பதைத்தும் நமக்கு ஞாபகப்படுத்தியுள்ளார். இதுகாறுங் கூறியவாற்றான் காலம் அரூபமுடையது, நித்தியமானது, இடைவிடாது விரைந்துசெல்லுந் தன்மையுடையது, மக்களாற் பொன்போற் போற்றத்தகுந்தது என அதன் அருமை விளங்குவதாயிற்று.

இனி நமது கடமையைப்பற்றி ஆராய்வாம். இக்காலச்சக்கரத்தினிடையே அகப்பட்டு மேல்கீழாகச் சுழன்றலையும் மக்களுள்

எல்லோரும் எக்காலத்தும் ஒரே தன்மையாக இருத்தல் அமையாது. கல்வி, செல்வம், ஒழுக்கம் முதலியவற்றால் உயர்ந்த நிலையிலிருந்த ஓர் நாட்டார் அல்லது ஓரினத்தார் தாழ்ந்தநிலைமையை அடைதலும், தாழ்ந்த நிலைமையிலிருந்தார் உயர்ந்தநிலைமைக்கு முயன்றுவருதலும் இயற்கையே. ஒழுக்க முதலியவற்றால் தாழ்ந்த நிலைமையிலுள்ளார் உயர்ந்த நிலைமையிலுள்ளாரையும் தாழ்ந்த நிலைக்கு இழுக்க முயலுத லும், உயர்ந்த நிலைமையிலுள்ளார் தாழ்ந்தநிலைமையிலிருந்து மேல் நிலைமைக்குவர முயல்வாரைக்கண்டு பொறாமையுற்றுக் கைகொடுத் துதவாது தாழ்த்தக் கருதுதலும் கடவுள் இயற்கைக்கு மாறான கொள்கையல்லவா? கடவுள் இயற்கைக்கு மாறான கொள்கையிலி ருப்பாரை மக்களென்றும் எண்ணலாகுமா? இந்த இயற்கைக்கு மாறான கொள்கையன்றோ நமது சமூகத்தின் நேசப்பான்மையையும் பெருநோக்கத்தையும் அகற்றிவிட்டது! நமது வீரசைவ மூல பஞ் சாசாரியர்களின் உண்மைக்கருத்திற்கு மாறான கொள்கைகள் தலைப் பட்டகாலத்தில் சீர்திருத்தஞ்செய்து உயர்த்துவதற்கல்லவா கடவு ளது பேரருள் நிலையைப் பெற்ற பெரியோரேத்தும் பெரியார் பலர் அவதாரஞ்செய்து கடவுள் நிலைக்கு மாறான கொள்கையிற் றலைப்படாது முழுமுதற்கடவுள் ஒருவர் உண்டென்னும் அன்புநிலையை மக் கட்கு அறிவுறுத்தி நல்வழிப்படுத்தற்கு உண்மையான நமது சமயச் சார்பில் ஊன்றிநின்று மக்களதுபண்பிற்கேற்றவாறு சிலர்க்கு வேதா கம புராண இதிகாச பாஷியங்களை விளக்கிக்காட்டியும், சிலர்க்கு இலி ங்காங்க சையோக அனுபவத்தை எடுத்துக் காட்டியும், சிலர்க்கு ஆல யம் முதலிய அறநிலைகளைத் தாபித்து நித்தியத்துடன் நைமித்திய மாகிய திருவிழாக்களை நடத்திக்காட்டியும் மக்களெல்லோரையும் தன்மதிப்புப்பெறச் செய்து தங்கடமையை ஆற்றுவாராயினர்.

இத்தகைய பெரியாருள் ஒருவரும் அருள்வள்ளலாருமாகிய ஸ்ரீ வசவேசர் நற்குலத்தில் அவதாரஞ்செய்தனர்; இளமையில் கலை களனைத்தையும் கற்று ஒழுக்கத்திற் சிறந்துவிளங்கினர்; குருமூர்த்தி யால் இலிங்கதாரணஞ்செய்விக்கப்பெற்று ஸ்ரீ பஞ்சாக்ஷர தீக்ஷையே மேலானதெனக் கைப்பற்றிநின்றனர்; பலியிடுதல் முதலிய கொலைக் குற்றத்தைக் கண்டு செயலற்று நின்று அதனை நீக்கமுயன்றனர்; அறிவுமேம்பாட்டால் மன்னரிடம் அமைச்சியல் பதவியைப்பெற்று அரசியற் சீர்திருத்தஞ் செய்தனர்; சமூகச் சீர்திருத்தஞ்செய்ய ஆங் காங்குத் தலைவரை ஏற்படுத்தினர்; தம் சீர்திருத்தக்கொள்கையை

நிலைநாட்டத் தாமும் தலைவருமாக ஊணும் உறக்கமுமின்றிச் சத்தியாக்கிரகநிலையில் நின்றனர். தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் கடவுட்கும் அடியார்க்கும் உரியனவென உதவிவந்தனர்; பக்திக் கடலே! பாசப்பகையே! எம்முறவேயெனப் பிரபுதேவராலும் கொண்டாடப்பெற்றனர். இவரன்றோ தங்கடமையைச்செய்து கூடலசங்கமேசராலுங் குழைந்துதழுவப் பெற்றவர்! இவ்வுண்மை யறியாரன்றோ சமூகச் சீர்திருத்தத்திலிறங்கிக் குறியுங் குணமுமிழந்து கடவுள் நிலைக்கு மாறானகொள்கையில் தலைப்படுகின்றனர்; அந்தோ!

வீரசைவ சமயாபிமான சிகாமணிகளே!

இப்பாரதநாட்டின்கண் தோன்றிய முன்னோர் மரபிற் பிறந்த நாமும் சமயாசாரியர் கூறிய முறையிற் றவறாது நின்று இஷ்டலிங்க பூசையிலும் மாகேஸ்வர பூசையிலும் நிலைபெற்ற அன்புடையராயிருந்து சமயச் சீர்திருத்தத்திற்கும் சமூகம் கல்வி செல்வம் பதவி முதலியவற்றால் பெருக்கம் அடைவதற்கும், நமது உடல் பொருள் ஆவி மூன்றையும் உதவலே நமது கடமையெனஉணர்ந்து இம்மை மறுமையின்பங்களை அடைவோமாக. சுபம்.

கடவுள் வாழ்த்து.

திரு, பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்,
பிஷப் ஹீபர் கல்லூரித் தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,
திரிசிரபுரம்.

இத்தொடர் கடவுளை வாழ்த்துதல்என விரியும். கடவுள் என்னும் செந்தமிழ்ச்சொல் உலகினைக்கடந்து நிற்கும் பொருள் எனவும், மனம் மொழி மெய்களைக் கடந்து நிற்கும் பொருள் எனவும் பொருள்படும். வாழ்த்துதல் என்றாலும் இனம்பற்றி வணங்குதலும் சிந்தித்தலும் கொள்ளப்படும்.

1. தமிழ் ஆரியம் முதலிய மொழிகளின் எழுத்துக்களெல்லாம் விகாரத்தானன்றி நாதமாத்திரையான இயல்பாற் பிறப்பதும், ஏனை உயிரும் ஒற்றுமாகிய தம்முடன் கலந்துநின்று தம்மை இயக்குவதும் ஆன அகரமாகிய முதலையுடையவாதல்போல உலகம் சௌற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வால் முற்று முணர்தலும், சித்தும் சடமுமாகிய தன்னுடன் கலந்துநின்று தன்னை இயக்குதலும் உடைய ஆதி பகவனாகிய முதலையுடையதாகும். ஆண், பெண், ஒன்று என்னும் மூன்

று பிரிவினதாகக் காணப்படும் இவ்வுலகம் தோன்றி நின்று அழியும் காரியமாக விருத்தலானும், அங்ஙனம் காரியமாகிய குடம் முதலிய அனைத்தும் தம்மையியற்றும் வினைமுதலையுடையவாதல் கண்கூடாக லானும் உலகமும் தன்னையியற்றும் ஆதிபகவனாகிய வினைமுதலையுடைத்தாதல் பெறப்படுகின்றது. எனவே உலகிற்கு முதலாகிய பொருள் கடவுள் என்று கொள்க.

2. மெய்யுணர்வினையுடைய கடவுளின்பிறவிப்பிணிக்கு மருந்தாகிய நல்லதாள்களை வணங்காராயின் எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அக்கல்வியறிவால் ஆய பயன் யாது? ஒன்றுமில்லை. கல்வியறிவிற்குப் பயன் அவன் றாளைத்தொழுது பிறவியறுத்தலே யாகும் என்க.

3. அன்பால்நினைவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர்நினைந்த வடிவோடு விரைந்து செல்லும் கடவுளின் மாட்சிமைப்பட்டஅடிகளை இடைவிடாது நினைத்தவர்கள் எல்லாவுலகிற்கும் மேலாகிய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்கள்.

4. ஒரு பொருளையும் விரும்புதலும் வெறுத்தலும் இல்லாத கடவுளின் அடியை இடைவிடாது நினைத்தவர்க்குத் தன்னைப்பற்றிவருவனவும் பிறவுயிர்களைப்பற்றி வருவனவும் தெய்வத்தைப்பற்றி வருவனவும் எனமூவகையால் வரும் பிறவித் துன்பங்கள் எக்காலத்தும் உண்டாகமாட்டா; எங்ஙனமெனில் உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடையனவாகலின் விருப்பு வெறுப்பற்றகடவுளடியைச் சார்ந்தபொழுது அவற்றிற்கும் விருப்பு வெறுப்புக்கள் இல்லையாகின்றன; ஆகவே, அவைகாரணமாக வரும் பிறவித் துன்பங்களும் இல்லாதனவாகும் என்க.

5. தலைமைக்குணங்கள் எல்லாமுடைய கடவுளின் மெய்யாகிய புகழை எப்பொழுதும் விரும்பிச் சொல்லுவாரிடத்து இருள்போல இன்னதன்மைத்தென ஒருவராலுங்கூறப்படாத அவிச்சையைப்பற்றி வரும் நல்வினை தீவினையென்னும் இரண்டுவினைகளும் உண்டாக மாட்டா; அழியுமியல்புடைய துறக்கவின்பம் முதலியவற்றைப் பயக்கும் நல்வினையும் தீவினைபோலப் பிறவிக்கேதுவாகும் பந்தமாகலின் அவ்விரண்டும் பொன்விலங்கும் இருப்புவிலங்கும் போலக் கடியற்பாலனவாகும். (அநாதியான அவிச்சையால் யான் என்னும் அகங்காரமும், அதனால்விருப்பு வெறுப்புக்களும், அவற்றால் நல்வினை தீவினைகளும், அவற்றால் இன்ப துன்பங்களும் உண்டாகுமெனக் கொள்க.)

6. மெய் வாய் கண் மூக்கு செவி யென்னும் ஐம்பொறிகளை வழியாகவுடைய ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசையென்னும் ஐம்புலன்கள்மேற் செல்லுகின்ற ஐந்து அவாவினையும் அறுத்த (இயல்பிலேயில்லாத) கடவுள் ஓதிய மெய்யாகிய ஒழுக்கநெறியின்கண் வழுவாது நின்றவர் பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வர்.

7. ஒருவாற்றானும் தனக்கு நிகரில்லாத கடவுளின் திருவடியை இடைவிடாது நினைத்தார்க்கன்றி ஏனையோர்க்கு மனத்தின்கண் உண்டாகும் துன்பங்களை நீக்குதல் இயலாது; திருவடியைநினையாதவர்கள் பிறவிக்கேதுவாகிய காம வெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின் பிறந்திறந்து அவற்றான் வருந்துன்பங்களுள் அழுந்துவர்.

8. அறக்கடலாகிய (பலவேறுவகைப்பட்ட அறங்களெல்லாவற்றையும் தனக்கு வடிவாகவுடைய) இறைவனது திருவடியாகிய புணையைச்சேர்ந்தார்க்கல்லது ஏனையோர்க்குப் பொருளும் இன்பமுமாகிய கடல்களை நீந்துதல் இயலாது; அவர் கரைகாணாது அவற்றுள்ளே யழுந்துவர்.

9. தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவேபாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை எனும் எண்வகைப்பட்ட தலைமைக் குணங்களையுடைய இறைவனது திருவடியை வணங்காததலைகளும் வாழ்த்தாதநாக்களும், உருவம்முதலிய தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்ளுதலில்லாத கண் முதலிய பொறிகளைப் போல, பயன்படுதலுடையனவல்ல.

10. கடவுளின் திருவடியென்னும் புணையைச்சேர்ந்தவர் காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வரும் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர்; அதனைச்சேராதவர் நீந்தமாட்டாராய் அதனுள் அழுந்துவர்.

இதுகாறும் கூறியவாற்றால் உலகத்திற்கு முதற் பொருளாகிய ஓர் கடவுள் உண்டென்பதும், கல்வியறிவிற்குப் பயன் அவன் திருவடியைத் தொழுது பிறவியறுத்த லென்பதும், அவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவனெறி நிற்றலும் செய்தார் வீடு பெறுவரென்பதும், அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்யாவழி உண்டாகும் குற்றம் இவையென்பதும், இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவியறுமென்பதும், அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்கு அஃதறாதென்பதும் பெறப்பட்டன.

கடவுள் வாழ்த்தின் பயன் இன்னவென்பதனை அடியில்வரும் வரலாற்றுனறிக: திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரில் வேளாளர் குலத்தின்கண் குறுக்கையர் குடியில் புகழனர் என்பவருக்கு மாதினியார் என்னும் அவர்மனைவியார் திருவயிற்றிலே திலகவதியார் என்னும் திருவனையார் பிறந்து சில்வாண்டானபின் மருணீக்கியா ரென்பவர் உலகம் உய்யும்படி திருவவதாரஞ் செய்தார். அவர் இளமையிலே தந்தை தாயாரையிழந்து, உலகநிலையாமையையுணர்ந்து, பலஅறங்கள் புரிந்து, முற்றத்துறந்து, சமயநூல்களை ஆராய்ந்து, பண்டுபுரிந்த நற்றவத்திற் சிறிது வழுவின்மையாற் சமண் சமயத்தை யடைந்தார். அடைந்தவர் அச்சமய நூல்களெல்லாவற்றையும் நன்குபயின்று தருமசேனர் என்னும் பெயருடன் சமணசமயத்தலைவராய் விளங்கும்பொழுது சிவபெருமான் அவரை ஆட்கொள்ளக் கருதிச் சூலை நோயால் அவர் வருந்தும்படி செய்தனர்; அந்நோயானது சமண்சமய மந்திர முதலியவற்றுனெல்லாம் தீராது மேன்மேல் முறுகி வருந்தாநிற்க, அவர் அதனைப்பொறுக்கலாற்றுது, திருவதிகை என்னுந் திருப்பதியிலே திருத்தொண்டு செய்துகொண்டிருந்த தமது தமக்கையாராகிய திலகவதியாரை யடைந்து வணங்கி, அவர் திருவைந்தெழுத்தை யோதி அளித்த திருநீற்றினை அணிந்து, திருக்கோயிலிற் சென்று இறைஞ்சிக் "கூற்றுயினவாறு விலக்ககிலீர்" என்னும் திருப்பதிகம் பாடிப்பரவினர். சூலை நீங்கிற்று: வீரட்டானேசர் திருவருளால் 'நின் பெயர் திருநாவுக்கரசு என விளங்குக' என வானின்கண் ஓர் வாக்கு எழுந்தது. திருநாவுக்கரசர் அப்பொழுதே சிவபெருமான் உலகிற்கு முதற்கடவுள் என்னும் உண்மையுணர்ந்தார்; உள்ளக்கமலத்தில் இடையறுது அவரை நினைந்தார்; அவருடைய மெய்யாகிய புகழைத் திருப்பதிகங்களால் எப்பொழுதும் மொழிந்தார்; கையில் உழவாரங்கொண்டு மெய்த்தொண்டு புரிந்தார்; சமணர்கள் இழைத்த நீற்றறையிலிடுதல் முதல் கடலிற் கட்டிப் போக்குதல் ஈருகவுள்ள கொடுந்தீமைகளை வென்றார்; பற்பல அற்புதங்களை நிகழ்த்தினர்; பொருள் இன்பங்களை அமிழ்த்தினர்; விருப்பு வெறுப்பை வீட்டினர்; மனக்கவலையை ஓட்டினர்; பிறவிப் பெருங்கடலைக் கடந்தார்; என்றும் பொன்றுத சிவசாயுச்சியம் என்னும் பேரின்ப வாழ்வை அடைந்தார். ஆதலால், அவர் காட்டிய நெறியைப்பின்பற்றிக் கடவுளை வழிபடுவோமாயின் நாமும் அத்தகைய பேரின்ப வாழ்வடைதல் ஒருதலை.

வீரசைவ பஞ்சாசாரிய பீடங்களும் அவற்றின் தோன்மையும்.

3-வது ஸ்ரீகேதார சமஸ்தானம்.

" த்ராக்ஷா ராமாக்ய ஸக்ஷேத்ரே ராம நாதாக்ய லிங்கத:
ஏகோ ராமஸ்ய ஜநந மாவா வஸ்து ஹிமாலயே"

(ஸ்வாயம்பு ஆகமம்)

பாரதநாட்டின் வடக்கெல்லையாகவும், கங்கைமுதலிய புண்ணிய நதிகட்குப் பிறப்பிடமாகவும், இப்பொழுது காணப்பெறும் மலைகளெல்லாவற்றுள்ளும் மிகப்பெரியதாகவும், எவ்வகையினும் உயர்ந்ததாகவு மதிக்கப்பெறுவது இமயமலை. இம்மலையின் அடிப்பாகத்திலுள்ளது கேதாரம் என்னும் புண்ணியத்தலம். இத்தலத்தின்கண் புகழ்பெற்று விளங்கிக் கொண்டிருப்பதாகிய இவ்வீரசைவ சமயாசாரிய பீடமானது எண்ணிறந்த மகத்துவத்தையுடையது மிகப்பழமையானது என்பதற்குப் பல ஆதாரங்களுள்ளன. துவாபரயுகத்திலிருந்து உலகமெங்கும் புகழ் பெற்றவரான வியாச மகரிஷியானவர், இந்த பீடத்தைத் தாபித்தவராகிய ஸ்ரீகண்டாகர்ணசிவாசாரியரால் சிவசித்தாந்த வுபதேசத்தைப் பெற்று முத்தராயினர். இதைப் பற்றி வியாசமுனிவரே தம்மால் எழுதப்பெற்ற ஸ்காந்தபுராணத்தின் உட்பிரிவாகிய காசிகாண்டத்தின்கண் விளக்கமாக எழுதியிருக்கின்றனர். இப்பீடம் பாண்டவர் காலத்தில் விளக்கமுற்றிருந்த தென்பதற்கும் ஸ்காந்தபுராணத்தில் கேதாரகாண்டத்தில் எழுதப்பெற்றிருப்பதே சான்றாகும். இத்தகையகாரணங்களால் இப்பீடமானது வியாசமுனிவருடைய காலத்திலிருந்ததென்றும் அதனால் துவாபரயுகத்தில் விளங்கியதென்றும் கொள்ளக்கிடக்கின்றது.

இப் பீடத்தின்கண் 300-க்கு மேற்பட்ட சுவாமிகளுடைய பட்டாவளிகள் (பட்டவரிசைகள்) கண்கூடாகக் காணக்கிடைத்திருக்கின்றன. ஒவ்வொரு ஆசாரிய சுவாமிகளுடைய காலம் குறைந்தது 20 வருடங்களென்று வைத்துக்கொள்வோ மாயினும் 6000 வருடங்கள் ஆயிருக்க வேண்டுமெனத் தோன்றுகின்றது. அன்றியும் இப்பீடத்தின் சம்பந்தமான மிகப்பழமையான தேவநாகரத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுகளும், தாமிர சாசனங்களும கிடைத்திருக்கின்றன. ஸ்ரீகரபாஷியத்தை யெழுதிய ஸ்ரீபதிபண்டிதரும் இப்பீடத்தின்

சீடராயினரென்று அவரால்எழுதப்பட்ட பாஷியத்திலிருந்தே தெரியவருகின்றது. இப்பீடத்தின்கண் கலியுகத்தில் அவதாரஞ்செய்தருளிய ஏகோராம சிவாசாரியர் பிரமசூத்திரத்தின்மேல் அதிகரணபாஷியமென்னும் பெயரால் சத்திவிசிஷ்டாத்வைத போதகமான ஓர் பாஷியத்தை எழுதியிருக்கின்றனரென்பது ஸ்ரீகரபாஷியத்தில் எழுதியிருப்பதிலிருந்து அறியக்கிடக்கின்றது.

இப்பீடத்திற்கு இமயமலையின்கணுள்ள டெகரி இராஜ்யத்தின்மகாராஜா அவர்கள் சிறந்த சீடராயிருந்து வருகின்றார்கள். அன்றியும், உதயபுரம், ஜம்பு (காஷ்மீரம்) முதலிய பதினொரு அரசர்கள் வருடந்தோறும் காணிக்கைபைக் கொடுத்து வருகின்றார்கள். இற்றைக்கு 50 வருடங்கட்கு முன்னர் இப்பீடத்திற்கு 976 கிராமங்கள் மானிபமாக இருந்தனவாம். இப்பொழுதோ 835 கிராமங்கள் கைவிடப்பெற்று 141 கிராமங்கள் மட்டிலும் பீடத்தின் ஆட்சியினுட்பட்டிருக்கின்றன. இப்பீடத்தின் மகாசுவாமிகள் டெகரி இராஜ்யத்திலுள்ள பிராமணுதி நான்கு வருணத்தவர்கட்கும் விதித்தல் விலக்குதல் கண்டித்தல் தண்டித்தல் பிராயச்சித்தஞ்செய்தல் முதலியன செய்தற்குரிமையுடையவர்கள். பிரசித்திபெற்ற பனிரெண்டு ஜோதிர்மய லிங்கங்களுள் ஒன்ருகிய கேதாரேஸ்வர தேவாலயம் இப்பீடத்தின் அதிகாரத்திலிருந்து வருகின்றது. பிரிட்டிஷ் காருண்ய கவர்மெண்டாரும் இதற்குப் பல கௌரவத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். இந்துஸ்தான தேசமெங்கும் இவர்கள் வேண்டியவளவு கத்தி, கட்டாரி, பந்தூகு, துப்பாக்கிமுதலிய ஆயுதங்களை உபயோகிக்கலாமென கனம் வைசராயர் அதிகாரங் கொடுத்திருக்கின்றனர். அன்றியும் பிரிட்டிஷ் ராஜியத்தில் எவ்விடத்தும் அட்டபல்லக்கு முதலிய 72 பிருதுகளுடன் பிரவேசஞ் செய்யலாமெனவும் அதிகாரமுண்டு.

அப்பக்கத்திலுள்ள சில ஸ்மார்த்தர்கள் இத்தகைய பீடத்தைத் தம்முடைய சுவாதீனத்திற்குள்ளாக்கிக்கொண்டு அனுபவிக்கவேண்டுமென்ற தீயவெண்ணத்தால் இக்கேதாரபீடம் வீரசைவர்கட்குரியதல்லவென்றும், சங்கராச்சாரியரால் தாபிக்கப்பெற்றதென்றும் சில

வருடங்களாகக் கோர்ட்டில்வழக்காடினுர்கள். இவ்வழக்குப் பலநாள் நடந்து முடிவில் அலகாபாத்கோர்ட்டில் இப்பீடம்ஆதிசங்கராசாரியர் காலத்திற்கு எவ்வளவோ முற்பட்ட காலத்தது என்றும், வீரசைவர் கட்கே சேர்ந்ததென்றும் முடிவுசெய்யப்பெற்று வீரசைவர்கட்கே சாதகமாயிற்று. இதுவீரசைவமதத்தின் பழமையைக் காட்டுவதற்குத் தக்க சான்ருகின்றதன்றோ!

கேதார சமஸ்தானத்தில் இப்பொழுது தலைவராக விளங்கும் **ஸ்ரீஜகத்குரு வைராக்யசிம்மாசனுதீஸ்வர ஸ்ரீநீலகண்டலிங்க சிவாசாரிய மகாசுவாமிகள்** பூர்வாச்சிரமத்தில் தாரவாடாவைச் சேர்ந்த கல்லேதேவர்என்ற கிராமத்தில்அவதாரஞ்செய்தவர்கள். இப் பொழுது சுவாமிகளுடைய வயது சுமார் 35. இவர்கள் கன்னடம், சமஸ்கிருதம், இங்கிலீஷ், மராட்டி, இந்தி, பகடிமுதலியபாஷைகளைக் கற்றுத்தேர்ந்த திறமையுடையவர்கள். யோகசாஸ்திர இரகசியங்களை நன்கறிந்த அனுபவமுடையவர்கள். இம்மகாசுவாமிகள் பீடாரோக ணஞ் செய்து சுமார் ஏழுவருடங்களாகின்றன. இவர்கட்குமுன்னர் இம்மடம் குறைந்தநிலைமைக்குவர சமஸ்தானத்திற்கே 75000 ரூபாய் கள் கடனுயின. இவர்கள் அவற்றையெல்லாந்தீர்த்துப் புதிதாக இல க்ஷக்கணக்கான ரூபாய்களை நிதியாகச்சேர்த்துக் கல்வியின் முன்னே ற்றத்திற்காகப் பெரிதும் முயற்சித்திருக்கின்ருர்கள். இம்மகாசுவாமி கள் பல்லாரி, ஹொசபேட்டை, நந்தியால், சிரிகேரி முதலான இட ங்களில் மாகேஸ்வரமாணவர்களின் கல்விவளர்ச்சிக்காகச் சமஸ்கிருத பாடசாலைகளை ஏற்படுத்தியிருக்கின்ருர்கள். சென்னை, தெகலி, பிரயா கை, கல்கத்தா, காசி, லாகூர் முதலியவிடங்களில் உயர்தர ஆங்கிலம் சமஸ்கிருதம் படிக்கின்ற மாணவர்கட்குச் சம்பளமுங்கொடுத்துதவி யுள்ளார்கள். தம்முடையபீடத்திலேயே ஓராங்கிலேய பாடசாலையும், ஓர் இந்தி பாடசாலையும், ஒரு சமஸ்கிருத பாடசாலையும் ஏற்படுத்தி நடத்திவருகின்ருர்கள். இன்னும் இவர்கள் காலத்தில் வீரசைவமதத் திற்கு எவ்வளவோ உபகாரச்செயல்கள் உண்டாகக்கூடுமென வீர சைவ சமூகம் எதிர்பார்க்கின்றது.

(தொடரும்)

ஐந்தாவது ஆண்டில் தலைமைவகித்த
திருவாளர், G. சிக்கவீரப்பா B. A., L. L. B., அவர்கள்
முன் னுரை.

(முன் தொடர்ச்சி)

வீரசைவ சித்தாந்தமத சிகாமணிகளே!

வீரசைவர்களுள் பண்டைக்காலத்தில் பல அரசர்களும் அமைச்சர்களும் இருந்தார்கள்என்பதும், இப்பொழுதும் இருக்கிறார்களென்பதும் நினைவுகூரத்தக்கன. இந்நாட்டில் தற்காலத்தில் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த கிருஷ்ணகிரி, தருமபுரி, ஒசூர் தாலூகாக்களும், பெங்களூரைச்சேர்ந்த ஒசக்கோட்டை, ஆனேக்கல் தாலூகாக்களுமாகச் சேர்ந்து ஓர் வீரசைவ ராஜ்யமாக இருந்தன. இப்பொழுது ஆனேக்கல்லில் வசிப்பவராகிய எனது மாமனார் பல்லேகார், எஸ். எம். வீரசிங்கராயர் அவர்களுடைய முன்னோர்களே மேற்குறித்த நாடுகளை ஆண்டுவந்தவர்கள். அவர்களாற் கட்டப்பட்ட கோட்டை, ஏரி, தேவாலயங்கள் இன்றுங் காணப்படுகின்றன. இவர்கள் திப்புசுல்தான் காலத்தில் தமது இராஜ்யத்தை யிழந்து இப்பொழுது மைசூர் அரசாங்கத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு 220 ரூபாய் (Political Pension) அரசாங்க வுதவி பெற்றுவருகின்றார்கள். இவ்வாறே சோன்டா, புங்கனூர், நெல்லியாலம் (நீலகிரி) ஆகல்வாடி, சூலகிரி, பேரிகை, கௌதி முதலிய விடங்கள் வீரசைவ ராஜ்யங்களாக இருந்தன. இந்த ராஜ்யங்களின் சரித்திரங்களையும், அரசர்கள் செய்து வந்த காரியங்களையும், கவிஞர்கள் ஏற்படுத்திய புத்தகங்களையும், குருபீடாதிபதிகளால் கட்டுவிக்கப்பட்ட மடங்களையும் ஆராயும்போது வீரசைவர்களுடைய பெருமை நன்குவிளங்கும். இவ்வீரசைவத்தின் மேலான கொள்கைகளைக்கண்டு ஆயிரக்கணக்கான மக்கள் இம்மதத்தைத் தழுவி ஜனத்தொகையையும் அதிகப்படுத்தியிருக்கின்றார்கள். ஆனால் இப்பொழுதோ கல்விக்குறைவாலும் ஒற்றுமைக்குறைவாலும் வீரசைவர்கள் பலபிரிவாகப் பிரிந்து இலை மறை காய்போல் மறைந்து நிற்கின்றார்கள். வீரசைவ மதத்தின் முக்கிய நோக்கமாகிய சகோதரப் பான்மையை அந்தோ கைவிட்ட நிலைமையிலிருக்கின்றார்கள்! அதன் முடிவுதான் என்னே! வாளேந்தி ஒருவர்க்கொருவர் பயனற்ற சண்டையை யுண்டாக்கிக்கொண்டார்கள். சிலநாட்க

ளுக்குமுன் உத்தங்கியில் நடந்த கொடுஞ்செயல் இதற்குச் சான்ருகின்றது. பேதமின்றியிருந்த இம்மதத்தில் இப்பொழுது காணப்படும் உட்பிரிவுகளைநோக்க அச்சம் மேலிடுகின்றது. இப்பிரிவினர்களுள் ஒருவர்க்கொருவர் உயர்வு தாழ்வுகளைக் கருதுவது மதிக்குறைவேயன்றி வேறன்று. இஃது கடவுளியற்கைக்குமாருன கொள்கையே. இனி இத்தகைய மகாநாடுகளைக் கூட்டி நம்முள காணப்படும் பேதங்களை யொழித்து ஒற்றுமைப்படுத்துவது இன்றியமையாதது.

சென்ற 1927 டிசம்பரில் பெங்களூரின்கண் அகிலபாரத வீரசைவ மகாசங்கத்தின் பத்தாவது மகாநாடு கூடி வீரசைவர்களின் முன்னேற்றத்திற்காகப் பல நன்மைகளைச் செய்துவந்திருக்கின்றது. பல பாஷைகள் பேசக்கூடியவர்கள்சேர்ந்து செய்யும்பிரசங்கங்களில் குறிப்பிட்டவை சிலருக்கே விளங்கக்கூடும். ஆதலின், ஆங்காங்கு இவ்வாறு மாகாண மகாநாடுகளைக் கூட்டி விஷயாலோசனைசெய்து முடிவுக்குவருவது மிகவும் உத்தமமாகும்.

பம்பாய் மாகாணத்திலுள்ள வீரசைவர்களில் 1000-க்கு 232 பேரும், மைசூரில் 230 பேரும், சென்னைமாகாணத்தில் 230 பேரும் ஐதராபாத்தில் 67 பேரும் சுயபாஷை யெழுதப் படிக்கத்தெரிந்தவர்களாயிருக்கின்ருர்கள். ஆங்கிலம் படித்தவர்களோ பம்பாய் மாகாணத்தில் 10,000-க்கு 69 பேரும், மைசூரில் 63 பேரும், ஐதராபாத்தில் 27 பேரும், சென்னையில் 12 பேருமாகஇருக்கின்ருர்கள். பெண்களின் நிலைமையோவெனில் தாய்மொழி பயின்றவர் 10,000 க்கு முறையே 6, 7. 3, 4 ஆக இருக்கின்றனர். ஆங்கிலந் தெரிந்தவரோ ஒருவருமிலர். அரசாங்க வுத்தியோகங்களில் பம்பாய் மைசூர் நாடுகளில் சிலர் மாத்திரம் இருக்கின்ருர்கள். சென்னை மாகாணத்தில் உயர்ந்த உத்தியோகத்தில் ஒருவர் மாத்திரம் இருக்கிருர். இதனை நோக்குங்கால் சென்னை மாகாணத்தார் வீரசைவர்கட்குத் தக்க வூக்கத்தைக் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. அடிக்கடி இத்தகைய சபைகளைக்கூட்டி நம் குறைகளை அரசாங்கத்தாருக்குத் தெரிவிப்பது மிகவும் வேண்டற்பாலதாகும். தமிழ்நாட்டிலுள்ள வீரசைவ மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவதற்காக மைசூர் பம்பாய் பிரதேசங்களில் நம் சகோதரர்கள் செய்துவரும்முயற்சியை நாமும் பின்பற்றவேண்டும். நமது பெண்மணிகட்கும் கல்வி கற்பித்தாலன்றி நமது சிறுவர்கள் கல்வியில் முன்னேற்றமடையலாகாது. பம்பாய்,

பெல்காம், பால்கோட் முதலிய விடங்களில் வீரசைவ மாணவ விடுதிகள் மிகுதியாகக் காணப்பெறுகின்றன. தார்வாடாவில் ஏராளமான மூலதனத்தைக்கொண்டு மாணவர்களைக் கல்வித்துறையில் பயிற்சிசெய்துவருகிறார்கள். ஸ்ரீமத் சிரசிங்கிதேசாயி என்ற புகழ்பெற்ற வீரசைவப் பெரியார் தமது சமஸ்தான முழுவதையும் மாணவர் கல்விக்கெனவே கொடுத்துவிட்டதைப் பாராட்டாமலிருக்கமுடியாதன்றோ! அதிலிருந்து வருஷந்தோறும் வரும் வருமான ரூபாய் 30,000 மும் வீரசைவ ஏழை மாணவர்கட்கு உபகாரச் சம்பளமாகக் கொடுக்கப்பெற்றுவருகின்றது. வீரசைவப் பெண்மணியொருவர் உயர்ந்த படிப்புடையராக விளங்குவதும் இந்நிதியின் பேருதவியினாலேயே. பம்பாய் முதலிய பிரதேசங்களிலுள்ளவர்கள் தனவந்தர்களாயிருத்தலின் இத்தகைய பேருதவி செய்கின்றார்களென்று நீங்கள் கருதலாம். ஆனால் அது முற்றுந் தவறு. சமூக முன்னேற்றத்திற்காக சேவைசெய்யவேண்டுமென்ற பரோபகார எண்ணத்தில் அவர்கள் செல்வவந்தர்களேயொழிய நீங்கள் கருதியபடி செல்வத்தில் பெருத்தவர்களல்ல. பெல்காம் முதலிய விடங்களிலுள்ள உயர்தர கலாசாலைகளில் வீரசைவ உபாத்தியாயர்கள் பலர் சம்பளமின்றி வீரசைவ மாணவர்கட்குக் கல்வி போதித்துவருகின்றார்கள். பெங்களூரில் சித்தராமண்ணா என்னும் வீரசைவ பக்தர் ஒருவர் தம் வீட்டில் 30 மாணவர்கட்கு இனமான உணவளித்து வருகின்றார். அவர் ஒரு தனவந்தரன்று. சாமானியமாகப் பொடிக்கடைவைத்திருப்பவரே. இப்படிச்செய்வதன்றோ உண்மையான தருமமும் மதசேவையுமாகும். இதனையறிந்தபின்னராவது தமிழ் நாட்டு வீரசைவர்களும் இந்நெறியைப் பின்பற்றி வித்தியாபிவிருத்திக்காக மூலதனஞ் சேர்த்தல் முதலிய உத்தம அறநெறியைக் கைப்பற்றுவார்களாக. தமக்கென ஓர் புதல்வனையில்லாதவர்க்ள், தாமீட்டிய பொருள்களைப் பலமாணவர்கட்குப் பயன்படும்படிச் செய்வார்களாயின் பல புதல்வர்களைப்பெற்று வளர்த்தறிவூட்டிய பாக்கியசாலிகளாகமாட்டார்களா? இதில் யாதும் ஐயமின்றே! சபயர்பிமானிகளே முந்துங்கள்! முந்துங்கள்!!

இக்காலத்தில் எச்சமூகமும் முன்னேற்றமடைய வேண்டுமானால் சுதேச பாஷையில் வர்த்தமான பத்திரிகை அவசியமல்லவா? இதனையறியாதார் யார்? மைசூரில் "ஸ்டார், பஞ்சாசாரியப்

பிரபா" என்னும் வாரப் பத்திரிகைகளும், பம்பாய் முதலான இடங்களில் இன்னும் பலபத்திரிகைகளும் வீரசைவர்கட்காகவே உழைத்து வருகின்றன. இத்தமிழ்நாட்டிலோ வீரசைவர்கட்காக உழைக்கும் தமிழ்ப்பத்திரிகை ஒன்றேனும் இதுவரை வெளிவராதிருப்பது பெருங்குறையன்றோ? இங்குக் கூடியிருக்கும் வீரசைவ சகோதரர்கள் யாவரும் முயற்சியும் உதவியும் காட்டினால் பத்திரிகை தோன்றுவது ஒரு பெருங்காரியமன்றே? இங்ஙனம் ஒரு பத்திரிகை வெளிவருமாயின் நமது சமூகத்தின்குறைகளையும் பேறுபாடுகளையும் விரைவில் போக்கலாமன்றோ? இது இங்ஙனமிருப்ப,

வீரசைவ மதத்தைக் காப்பாற்றவும், விருத்திசெய்யவும் ஏற்படுத்தப்பெற்ற குருமார்களும், மடாதிபதிகளும் இதற்கான வேலைகளைச்செய்யாதிருப்பது நீதியாகுமா? இனியேனும் உறங்காது முன் வருவார்களாக.

மைசூர் பம்பாய் மாகாணங்களில் வீரசைவ மடாதிபதிகள் செய்துவருந் தொண்டுகள் பாராட்டற்பாலனவாகின்றன. ஸ்ரீநிரஞ்சன ஜகத்குரு ஜயதேவ முருகராஜேந்திர மகாசுவாமிகள் தாம் விஜயஞ்செய்யுமிடங்களில் வசூலாகும் பணம் முழுவதையும் மாணவர் விடுதிகளுக்காக ஆங்காங்கே உபயோகப்படுத்திவருகின்றார்கள். பெங்களூரில் ரூ. 40,000-மும், தும்கூரில் ரூ. 20,000 மும், சித்திரகல் துர்க்கத்தில் ரூ. 40,000-மும் நிதியேற்படுத்தியதுடன் பல மாணவர்கட்கும் உபகாரச் சம்பளமும் கொடுத்துவருகின்றார்கள். இம்மாதிரியாகவே தார்வாடாவிலும் ஸ்ரீ நிரஞ்சனமூர்த்தி மிருத்தியுஞ்சய சுவாமிகள் ஊர் ஊராய்த் திரிந்து எடுக்கும் பிக்ஷையைக்கொண்டு 100 மாணவர்களுக்கு உணவும் உடையும் உபகாரமாக வழங்கிவருகிறார்கள். இவ்வாறு பல மடங்களும் மடாதிபதிகளும் வீரசைவ சமூகத்திற் குழைத்துவருவதால் அப்பாகங்களில் வீரசைவ மாணவர்கள் முன்னேற்றமடைந்துவருகிறார்கள். இத் தமிழ்நாட்டிலுள்ள வீரசைவ மடாதிபதிகளுக்கு இன்னும் இத்தகைய எண்ணம் தம்மனதில் தோன்றாமலிருப்பது தமிழ்நாட்டு வீரசைவர்களின் துர்ப்பாக்கியமேயன்றி வேறன்று. தமிழ்நாட்டு வீரசைவ மடாதிபதிகள் இதை விரைவிலுணர்ந்து முன்வருவார்களென நம்புகின்றேன். இத்தகைய காரியங்களை நடத்தும் பொறுப்பும் கடமையும் மடாதிபதி

களுடையதே! மதுகொண்டபல்லியென்னும் கிராமவாசியாகிய ஓர் ஏழை ஆதி திராவிடர் ஊரூராய்த்திரிந்து பிச்சையெடுத்து 30 மாணவர்கட்கு உணவளித்துவருகின்றார். இதுவன்றோ சமூகசேவை! கனந்தங்கிய மடாதிபதிகள் தம் மதிப்பிற்கேற்றவாறு இவ்விஷயத்தில் முன்வருவார்களாயின் வெற்றியுறுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமின்று. இப்பொறுப்பு முழுவதும் மடாதிபதிகளுடையனவென்றே நாம் வாளா இருப்பது முறையன்று. நாமும் அவர் வழிப்பட்டு முயல்வது நமதுகடமை யென்பதை உணர்தல்வேண்டும். நிற்க,

இதுகாறுங் கூறியவற்றைப் புராணவைராக்கியமாகக் கேட்டளவில் விடுத்துச் செல்லாது உங்கள் ஊக்கத்தைப் பயன்விளைவில் காட்டுவீர்களென எதிர்பார்க்கின்றேன். இதுவரையும் யான் கூறியவற்றைச் சாவதானமாகக் கேட்டுப் பெருமைப்படுத்தியதற்காக உங்கட்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுபோலவே இனியும் ஆதரவளித்து மகாநாட்டைச் சிறப்பாக நடத்திக்கொடுக்கும்படி உங்களைப் பணிவுடன் மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன். சுபம்!

'வீரசைவம்.'

திருவாளர், S. ஏகாம்பர ஐயர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர்,
பச்சையப்பர் உயர்தர கலாசாலை, காஞ்சிபுரம்.

வீரசைவம் என்னும் இப்பத்திரிகையின் மலர் 1, இதழ் 2-ல் அடைதற்கரிய மனிதப் பிறவியை அடைந்த நாம் அறியவேண்டுவது சமயங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்து விளங்குவது சைவசமயம் ஒன்றே என்பதுபற்றி ஒருவாறு தொகுத்துக் கூறியுள்ளோம்.

இனி **வீராகமம் வாதுளாகமம் ஸ்வாயம்பு வாகமம் சுப்பிரபோதாகமம்** முதலிய ஆகமங்களும், **இரேணுகபாஷ்யம் சோமநாதபாஷ்யம் பண்டிதபாஷ்யம் ஸ்ரீகரபாஷ்யம்** முதலிய பாஷ்யங்களும், **வேதம் இதிகாசம் புராணம்** முதலிய பல சாஸ்திரங்களும் **வீரசைவம்** உயர்வுடைத்தெனக் கூறுதலின் அதனையறிந்து கடைப்பிடித்தொழுகல் முற்கூறிய அதனினுஞ் சிறந்ததொன்

றென்பதை உய்த்துணர்வோமாக. ஆஸ்திகர்களாயும் வைதிகர்களாயும் உள்ள நாமெல்லோரும் வேதம் ஆகமம் என்னும் இரண்டும் ஈஸ்வர வாக்கியங்களாகும் எனக் கருதிப் போற்றிவருதல் நம்மனோர்யாவர்க்கும் ஒப்பமுடிந்த துணிபேயாகும். ஆயினும் வேதம் பொதுவாய் நின்று மறையின் கடைப்பகுதியாகிய உபநிடதங்களினும் முதற்பகுதியாகிய மந்திரங்களினும் இலை மறை காய்கள்போல திவ்பாகமங்களின் தெளிபொருள்களையே கூறுநிற்கின்றது. இக்கருத்துப்பற்றியே "மறையின் உட்பொருளே ஆகமாந்தம்" என்றும், அதுவே வேதசாரம் என்றும், இதில் உயர்ந்தது பிறிதொன்றில்லை என்றும், வேதம் பூர்வபக்ஷம் என்றும், ஆகமங்கள் சித்தாந்தமுடிவென்றும், இதனால் உணர்த்தப்படுவதே பரஞானமாகும் என்றும் பலவாறு வரைந்துள்ளார்கள். இத்தகைய பரஞானத்தையும் பரஞானத்தால் அடையும் பரசுகப் பெருவாழ்வாகிய பரம்பொருளையும் அடைய விரும்பும் நம்மனோர்க்கு முக்கிய சாதனமாயுள்ளது அத்திவ்பாகமங்களேயாகும் என்பதற்கும் அதன்வழி நடத்தலே வைதிகமார்க்கம் என்பதற்கும் ஒரு சிறிதும் ஐயப்பாடின்று. அத்தகைய திவ்யாகமங்கள்.

சிவசம்ஸ்காரிணஞ்சைவ ஜ்ஞாநதர்மவதாம்ஸதா
அஷ்டாவிம்சதிபேதேந சாகமாஸ்துசிவோதித:
காமிகம்யோகஜம்ஸிந்தியம் காரணம்த்வஜிதம்ததா
தீப்தம்சூக்ஷ்மம்ஸகஸ்ரஞ்சாப் யஞ்சுமாசுப்ரபேதகம்
விஜயஞ்சைவவிச்வாசம் ஸ்வாயம்புவமதாநலம்
வீரஞ்சரௌரவஞ்சைவ மகுடம்விமலம்ததா
சந்த்ரஜ்ஞானஞ்சபிம்பஞ்ச ப்ரோர்க்கீதம்லளிதம்ததா
ஸித்தம்ஸந்தாநசர்வோக்தம் பாரமேஸ்வரமேவச
கிரணம்வாதுளஞ்சைவே த்யஷ்டாவிம்சதிசம்ஹிதா:

என்னும் வீராகம வாக்கியத்தால் இனைத்தென்றும் இவ்வளவிற்றென்றும் அறியக்கிடக்கின்றன.

இவற்றுள் காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் என்னும் ஐந்தும் பரமசிவத்தினது சத்தியோஜாத முகத்தினும், தீப்தம், சூக்ஷ்மம், சஹஸ்ரம், அம்ஸுமாந் ஸுப்பிரபேதம் என்னும் ஐந்தும் வாமதேவ முகத்தினும், விஜயம், நிஸ்வாசம், ஸ்வாயம்புவம், ஆக்நேயம், வீரம் என்னும் ஐந்தும் அகோரமுகத்தினும், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஜ்ஞாநம், முகபிம்பம்என்னும் ஐந்தும் தத்புருஷ

முகத்தினும், ப்ரோத்கீதம், லளிதம், ஸித்தம், ஸந்தாநம், ஸர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என்னும் எட்டும் ஈசான முகத்தினும் நமது ஆசாரியர்களாகிய ரேவணாராத்தியர் மருளாராத்தியர் பண்டிதாராத்தியர், ஏகோராமாராத்தியர், விஸ்வாராத்தியர் முதலான பூர்வாசாரியர்கள் சத்தியோஜாதாதி முதலிய பஞ்சமுகங்களினின்றும் உற்பவித்ததுபோலவே அவ்வாகமங்களும் தோன்றியனவாகும். இதனை அவநெறிகளைந்து சிவநெறிபூண்டு கற்பனைக்கு ஊற்றாகவிளங்கும் துறைமங்கலம் சிவப்பிரகாசப்பெருவள்ளல் தாமியற்றிய இஷ்டலிங்க அபிஷேகமாலையில்

"நாடரிய சத்தியோ சாதத்தும் வாமத்தும்
நன்று மகோரத்தினும்
நவையற்ற புருடத்தும் ஆகமமோ ரைவ்வைந்து
நல்கி யீசானத்திலே
பீடுதரு மெட்டு முறை தந்து" எனத் திருவாய் மலர்ந்தருளியதூஉம் அறிவுறுத்துவதாகும்.

இக்காரணத்தானன்றே நமது சமயாசாரியர்களது உற்பவம் முதலியவைகளையும், வீரசைவ சித்தாந்தம் முதலியவைகளையும், அவ்வாகமங்கள் 28-ம் பலப் பல விடங்களிலும் பலமுறை கோஷிப்பனவாகின்றன.

1. ஆகமம் என்னும் அருமைச் சொற்கு ஆன்றோர்கள், பரமாப்தராய பரசிவத்தினின்றும் வெளிப்பட்டமையால் ஆப்தரினின்றும் தோன்றியது ஆகமம் என்றும்,

2. ஆ என்பது பாசம்எனவும், க என்பது பசுஎனவும், ம என்பது பதி எனவும் பொருள்கூறி திரிபதார்த்த லக்ஷணத்தை உணர்த்தும் நூல் ஆதலால் ஆகமம் என்றும்,

3. ஆ என்பது ஞானம் எனவும், க என்பது மோக்ஷம் எனவும், ம என்பது மல நாசம் எனவும் பொருள்கொண்டு ஆன்மாக்களது மலத்தை நாசம் பண்ணி ஞானத்தை யுதிப்பித்து மோக்ஷத்தைக் கொடுத்தலால் ஆகமம்என்றும் பொருள்கூறி மகிழ்வாராயினர்.

இவ்வாகமங்கள் ஞானபாதம் யோகபாதம் கிரியாபாதம் சரியாபாதம் என்று தனித்தனி நான்குபாதங்களையுடையதாகும். இவற்

றுள் ஞானபாதம் பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்த லக்ஷணங் களையும், யோகபாதம் பிராணுயாமம் முதலிய அங்கங்களையுடைய சிவயோக லக்ஷணங்களையும், கிரியாபாதம் மந்திரங்களின் உத்தாரம் பூசை செபம் என்னும் இவற்றின் லக்ஷணங்களையும், தீக்ஷைமுதலிய லக்ஷணங்களையும், சரியாபாதம் சமயாசாரலக்ஷணங்களையும் உணர்த் துவனவாகும் என்பர். இத்தகைய ஒப்புயர்வற்ற சிறப்புவாய்ந்த ஆக மங்களால் சிறப்புவகையாகவும் நான்கு வேதங்களால் பொதுவகை யாகவும் கொண்டாடப்படும் பெரும் பேறுபெற்றது நமது வீரசைவ மேயாகும். இக்கருத்தானன்றே மேற்கூறிய ஆகமங்களுள் பரம சிவத்தின் ஈசான முகத்துத் தோன்றி ஆகமங்களின் முடிந்த கருத் துக்களை முடித்துக் கூறுவதாய் சிரசாகநிற்கும் வாதுளாகமம்,

“ ஸைவஞ்ஸதுர்விதக்ஞேயம் ஸமாஸாது ஸ்ருணுசண்முக
ஸாமந்யம் மிஸ்ரகம் ஸைவ ஸுத்தம் வீரம் யதாக்கிரமம் ”

என்பது முதலிய பல வாக்கியங்களினுல் சைவம் நான்குவகைப்படும் எனவும், அவைகள் சாமான்ய சைவம், மிசிரசைவம், சுத்தசைவம், வீரசைவம் எனவும் கூறி சாமான்ய சைவலக்ஷணம் இத்தன்மைத் தென முடித்து, (ஸாமந்ய லக்ஷணம் புரோக்தம் வக்ஷேமிஸ்ரஸ்ய லக்ஷணம்) என்பதுமுதலிய பலவாக்கியங்களினுல் மிஸ்ரசைவ லக்ஷ ணம் இத்தன்மைத்தென முடித்து (மிஸ்ரசைவ மிதிப்புரோக்தம் ஸுத்த சைவ மதஸ்ருணு) என்பது முதலிய பல வாக்கியங்களினுல் சுத்த சைவ லக்ஷணம் இத்தன்மைத்தென முடித்து இறுதியில் வீர சைவம் கூறுமுகத்து

சுத்தஸைவ மிதிப்ரோக்தம் வீரசைவ மதஸ்ருணு
ஸர்வேஷா மபிஸைவாநாம் வீரஸைவம் மகத்தரம்

ஸுலபம் தேவபூஜேந ஸுலபஞ்ச கிரியாவகம்
ஞாநகம்யம் ரகஸ்யந்து கைவல்ய பதகாரணம்
வீரஸைவ மிதிக்ஞேயம் தேஷாம் லக்ஷணமுச்யதே
ஏவமேகாயதே யஸ்மாது ஸர்வஸ்மிந் ஜகதீஸ்வரி,

எனக்கூறி முடிவடைகின்றதாகும். இதன் உண்மையை யுணருங்கால் முற்கூறிய மூவகைச் சைவபேதங்களையும் சண்முகப்பெருமானுக்கு உபதேசித்து, சைவபேதங்களுள் மேலானதும், ஞானமயமானதும், மோக்ஷபதத்துக்குக் காரணமானதும், சுலபமாக அடையத்தக்கது மாகிய வீரசைவ நிலைமையினை பரமரகசியமாக உபதேசிக்கின்றேன்.

கேட்பாயாக பரமேஸ்வரி என்று பரசிவப்பெருமானே உமாதேவியாருக்கு உபதேசித்தருள்வாரெனின் இதன்மேன்மை இத்தன்மைத்தென்று எவ்வாறு உரைப்பது ! சைவபேத லக்ஷணங்களை விரிவாக இவ்வாகமம் கூறுகின்றது. ஈண்டு எடுத்துரைத்தல் மிகையாதலின் கூறுதொழிந்தேன். பின் வேண்டிய விடங்களில் வேண்டுமளவு எடுத்துக்கூறும் கருத்துடையேன். இவ்வீரசைவசித்தாந்தம் வேதங்களிலும் ஆகமங்கள் பலவற்றுள்ளும் பலவிடங்களிலும் கூறப்பட்டுள்ளதாதலின் அவைகள் யாவும் பின் வேண்டிய காலங்களில் கூறற்பாலன. இதனை வீரசிங்காதன புராணம்

"வாதுளாகமத்தின் உத்தரத்துறு தந்திரோக்த
வண்பிரதிஷ்டை மருவும்
ஆதியாஞ் சிவசித்தாந்த தந்திரத்தும் அதர்வண
வேத மத்தியினும்
நீதியாம் அநாதிவீர சைவத்தின் நிலையினைத்
தொகுத்தான் நிகரின்றி
ஓதிடும்பரம ரகசியமாக உரைத்தனன்
உமையவள் தனக்கே." எனவும்

சித்தாந்த சிகாமணி

"சதுமறையுள்ளும் மிக்க சாத்திரங்களினு மீரோன்
பதுவித புராணத்துள்ளும் பகர்தருங் காமிகந்தான்
முதல்வரு மாகமத்தும் மொழிந்திடப் பட்டிடுஞ்சங்
கதமுமெய் விடாதுலிங்க தாரணம் விறற்சைவற்கே."

"ஏகனுற்றருள் காமிகமே முதல்
ஆகமத்தின் அறைந்திடும் உத்தர
பாசமுற்றும் பகர்வீர சைவமாம்
சோகமற்றுயர் தொன்மதந் தோன்றுமால்"

எனவும் மொழிந்தவைகள் போற்றற்பாலன.

இதனால் நாம் அறியக்கிடந்தன வீரசைவம் பூர்வீக மதம் என்பதும், பிரமாணமதம் என்பதும், வைதிகமதம் என்பதும், இதனை ஆகமங்களில் இறைவனே கூறுநிற்கின்றாரென்பதும், நமது சமயாசாரியர் உற்பவம் முயலியவற்றை அவ்வாகமங்களே எடுத்துரைக்கின்றன வென்பதும், எவ்வகையினும் யாவரும் போற்றற்குரியதே என்பதும் முதலியவைகளேயாம், சுபம், (பின்னும் வரும்)

ஸ்ரீ பொம்மபுரம்

சிவஞானபாலய தேசிகராதீன பீடமும் அதன் பெருமையும்.

" பாக்கியமும் பாலுமுமை புகட்டியமெய்ஞ் ஞானப்
பாலனீ யளவிறந்த சிவபெருமா னடியார்க்
கரக்கியிடல் கருதியே 'யுருத்திரபல் கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ' வெனத்தன்
றாக்கினிடை யுரைசெய்தா னென்றேயென் றனக்குத்
தோன்றுகின்ற துலகில்வே றொருவரிலா மையினாற்
சீர்க்கவினர் புகழ்மயிலை மால்வரையின் விளக்கே
சிவஞான தேவனெனச் சிறந்தவருட் கடலே" என்று

தவப்பிரகாச சிவப்பிரகாச சுவாமிகளால் வியந்து பாடப்பெற்ற ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர் ஆதீன வீரசைவ பீடமானது தொண்டை மண்டலத்திலே தென்னாற்காடு ஜில்லா திண்டிவனந் தாலூகாவில் பாண்டிச்சேரிக்கணிமையில் கடற்கரையின்கண் விளங்குவது. சிவ பெருமானையன்றிப் பிறரைப்பாடுதலில்லையென உறுதிகொண்டிருந்த சிவப்பிரகாச முனிவரும் முருகப்பெருமானது கட்டளையை மேற் கொண்டு நெஞ்சுவிடுதூது பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களைப் பாடிக் கையுறையாகச் செலுத்தித் துதித்து இந்த பீடத்தின் இரண் டாவது பட்டம் சிவஞானதேசிக சிவாசாரியரால் வீரசைவ தத்துவ ஞானோபதேசமுஞ் செய்யப்பெற்றனர் எனின், இதன்பெருமை அள விடற்பாலதன்று. பின்னர் இந்த ஞானதேசிகர் ஆணையை மேற் கொண்டே சமஸ்கிருத பாஷையிலுள்ள சித்தாந்த சிகாமணியென் னுந் தத்துவ நூலையும், பிரபுலிங்கலீலையையும் பண்டிதர் அனைவரும் கண்டின்புறும்படித் தமிழில் மொழிபெயர்த்துப் பாடியருளினர்.

இப்பொழுது பொம்மயபாளையத்திற் காணப்பெறும் கல் திருப்பணியாலாகிய பெரியதோர் அழகிய மடாலயத்தின் கட்டட மானது செஞ்சி நகரை யாண்ட திரியம்பக மகாராஜன் என்பவரால் கட்டப்பெற்றது. காஞ்சீபுரத்திலும் இதனைச் சேர்ந்ததோர் பெரிய மடம் ஒன்றிருக்கிறது. இது காஞ்சியை ஆண்டுகொண்டிருந்த நவா ப்பு அரசரால் கட்டிக்கொடுக்கப்பெற்றது. இவ்விரண்டிடத்தும் சுவா மிகள் யோகஞ் செய்துகொண்டிருந்த நிலவறை யொடுக்கங்களிருக் கின்றன. இவைகள் பூமி மட்டத்தின்கீழ் 12 அடி ஆழத்திலிருக்கின்

றன. இவற்றுள் இறங்கித் தரிசிப்பார்க்கு விபூதியாலாகிய ஆதார லிங்கம் அருள்வடிவாக விளங்குகின்றது. நடுநாட்டை யாண்டிருந்த குறுநில மன்னராகிய சிதம்பரபூபதிஎன்பவர் இவ்வாதீனத்தின் சிஷ்யராகிப் பலவிளைநிலங்களையும் சர்வமானியமாக விட்டிருக்கின்றனர் பொம்மயபாளயம் கிராமமுழுதும் இம்மடாலயத்திற்கே இனுமாக விடப்பெற்றிருக்கிறது. இன்னும் திருக்கழுக்குன்றம் செங்கற்பட்டு முதலிய சுமார் 60 கிராமங்களில் தக்க நிலங்களிருக்கின்றன. இவைகட்கெல்லாம் சோழமன்னர் நவாபு முதலிய அரசரால் கொடுக்கப் பெற்ற சாசனங்கள் அரபி முதலிய பாஷைகளிலிருக்கின்றன. கல்வெட்டுச் சாசனமும் உண்டு. இம்மடாலயத்தின் பெருமையைக்கருதி பல அரசர்களால் கொடுக்கப்பெற்ற வெள்ளியாளிமுகப் பல்லக்கு, ஏகசத்திரம், இரண்டு மகரத்துவசம், ஈட்டி, பாலா, சுருட்டி, தோரணம் முதலிய 20-க்கு மேற்பட்ட பிருதுகள் இருக்கின்றன. இங்கு வருடந்தோறும் வைகாசி விசாகத்தில் மகாகுருபூசை நடைபெற்று வருகின்றது. அவ்வமயம் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கட்கு உணவு கொடுக்கப்பெற்று மாகேஸ்வர ஆராதனையும் நடக்கின்றது. வடநாட்டிலிருந்துவரும் யாத்திரைவாசிகட்குத் தினந்தோறும் சதாவர்த்தி கொடுக்கப்பெறுகிறது.

திண்டிவனத்தையடுத்த மயிலத்தில் மயூராசலம் என்னும் மலையின்கண்ணுள்ள ஸ்ரீ சுப்பிரமணிய தேவஸ்தானம் இம்மடாலயத்தின் ஆதீன பரம்பரம்பரை ஆட்சியிலிருந்துவருகின்றது. இந்த ஆலயத்தின் நித்திய நைமித்தியங்களெல்லாம் ஏனைய ஆலயங்கட்கு ஓர் எடுத்துக்காட்டாகக்கொள்ளும்படி விதிமுறை தவறாது சிறப்பாக நடத்தப்பெறுகின்றன. இம்மடாலயத்தின் பாதுகாப்பெல்லாம் முருகப்பெருமானது அருளாலும், இந்த ஆலயத்தின் பூசை முதலிய சிறப்புக்களெல்லாம் ஆதீனகர்த்தரின் பேரன்பாலும் செவ்வனே நடைபெற்றுவருகின்றன என்பது கண்டுதரிசிப்பார்க்குக் கண்கூடாக விளங்கும். இதனைச்சேர்ந்த மடங்கள் சிதம்பரம் மதுரை பெருமுக்கன்மலை முதலிய இடங்களில் இருந்திருக்கவேண்டுமெனச் சரித்திரத்தால் தெரியவருகின்றது. இம்மடாலயத்தின் சரித்திரமனைத்தும் செய்யுள் வடிவாயுள்ள மயூராசலத் தலபுராணத்தில் கூறப்பெற்றுள்ளன. இந்த ஆதீனத்தின் வாலாற்றினையும், பட்டாவளிகளையும், மகத்துவங்களையும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் வாசகர்க்குப்போதமாகும்படி எழுதிவரத் துணிகின்றேம். (தொடரும்)

நமது வீரசைவம் என்னும் பத்திரிகையைப்பற்றிய

மதிப்புரைகள்.

நாமகிரிப்பேட்டை, ஸ்ரீமந் மழையமல்லிகார்ச்சுன தேவர் திவ்ய ஸ்ரீபாத பத்மாராதகரும் ஸ்ரீ கூடலிஸ்தலமடம் வீரசூரிய சிம்மாசன கர்த்தருமாகிய

வீரகுருசுவாமிகள் அனுப்பிவைத்த வாழ்த்துரைச் செய்யுள்கள்.

1. செந்தமிழ் மலரா வுளமிக மகிழ்ந்தோங் தேமலர்த் தவிசுடைச் [செம்மல்
தந்தவிவ் வுலகி னுற்றபல் சமயந் தன்னினுந் தானுயர்ந் திலங்கும்
நந்தனி வீர சைவமாம் பயிர்க ணனிசிறந் தோங்கவிக் காலத்
தந்தமில் புகழுற் றெழுந்துமேனிவந்த வருண்மழை வீரசைவமுமே.

2. இத்தகு வீர சைவமா மலரு மீங்கிவண் மலர்தர முயன்ற
மெத்தகு நும்ம னோர்க்கா னேங்கு மேன்மையு மாயுளு முதவி
யித்தரை யதனி னிலைபெற மலரு மிதழ்பல விரிந்து பல்லாண்டு
முத்தம ரிதயங் களிபெற வெங்கு முலவிவாழ்ந் திலங்குக மன்னோ.

இங்ஙனம்,
ஸ்ரீ வீரகுருசாமிகள்.

திருவாளர், வித்துவான் அ. வரதநஞ்சயபிள்ளையவர்கள், ஜலகண்டபுரம்.

அன்பரீர்! உபயக்ஷேமம்.

நீவிரனுப்பிய 'வீரசைவம்' மலர் க-ன் க, உ இதழ்கள் கண்டு மகிழ்கொண்டனம. அம்மகிழ்ச்சியே அடியிற்காணும் செய்யுளாக முளைத்து நும்பா லெய்துகின்றது. 'சிவப்பிரகாசர் தீங்கவியின்பம்' எனப் பெயரிய கட்டுரை தொடர்ச்சிபெற அடுத்த இதழில் வெளிப் படத் திருவருளைநாடி ஒருப்பட்டுள்ளேன். அமயம் நேர்ந்துழியெல்

லாம் நுங்கட்டளையை நிறைவேற்ற முயல்வேன். இவ்வரும் பெரும் பணியி லீடுற்ற வீரசைவத் தலைவர்கட்கும், புரவலர்கட்கும், இனிது நடாத்தும் புலமை சான்ற நுமக்கும் என் மனமார்ந்த வணக்கமும் வாழ்த்தும் உரியனவாம்.

வாழ்த்து வெண்பா.

தாரசைவம் பார்கொன்றை தாங்குசடை யோனருளால்
வீரசைவங் கற்று மிகமகிழ்ந்தேம் — நேரிசையோ
டென்றும் நனிவாழ்ந் திலகவிந்தப் பத்திரிகை
நன்றுபுரிந் தியார்க்கு நயந்து.

இங்ஙனம்,
தம்மைமறவா, A. வரதநஞ்சய பிள்ளை.

பத்திராதிபர் அவர்கள், சிவநேசன்.

——(o)——

தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற் கழகத் திலிருந்து வெளிவரும் சிறந்த செந்தமிழ்த் திங்கள் வெளியீடு, முதலாவது மலர் முதலாவது இதழ் வரப்பெற்றோம். தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணம் சமய சாத்திரம் முதலிய பன்னூல்களையும் நல்லாசிரியர்பால் வரன்முறையாகக் கற்றுத்தேறிப் புலமை நிரம்பிய வீரமாகேச வீ. குமாரவீரையரவர்களை யாசிரியராகவும், பொம்மபுரம் ஸ்ரீ சிவஞான பாலைய தேசிக சுவாமிகளவர்களைப் புரவலராகவும் பெற்று விளங்கும் பெருமையுடையது. வீரசைவ சமயத்தின் இயல்பு, ஆசிரியர்களின் சரித்திர ஆராய்ச்சி, அன்னோரெழுந்தருளிய பீடங்களின் வரலாறு, அவர்களருளிய நூல் நயங்கள், வடமொழி கன்னடமுதலிய மொழிகளிலுள்ள வீரசைவ நூல்களின் மொழி பெயர்ப்பு, வீரசைவ சமூக முன்னேற்றம் ஆதியவற்றைச் செவ்விய தமிழ்நடையிற் றன்னுட்கொண்டு திகழ்வது. இதன் ஆண்டுத்தொகை ரூபா இரண்டு.

பத்திராதிபர் :— வீரமாஹேச வீ. குமாரவீரையரவர்கள், வீரசைவ நிலையம், முசிறி, திருச்சி ஜில்லா என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றின்புறலாம்.

அட்டாபரணம்.

திருவாளர், கந்தசாமி ஐயரவர்கள், தேத்தாக்குடி

2-வது உருத்திராக்கம்.

" நீற்றின் மூழ்கிநன் னெற்றியிற் புண்டரந்
தோற்ற வீசனைத் தொண்டினர்ச் சிப்பவன்
போற்றி யக்க மணியும் புனைகவென்(று)
ஆற்றன் மிக்குயர் ஆகமம் ஓதுமால். "

திருநீற்றால் உடல்முழுதும்பூசி நெற்றியில் திரிபுண்டரந்தரித்து சிவபெருமானை அர்ச்சிக்குந் தொண்டினைச் செய்யும் வீரசைவர் ஆதி சைவர் சைவர் யாவரும் உருத்திராக்கத்தை இன்றியமையாது தரித்தல் வேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன. இதனால் உருத்திராக்க மணியாது செய்யும் சிவபூசை முதலியன பயனற்றன என அறிதல் வேண்டும்.

ருத்திராக்ஷம் என்னும் வடமொழித்தொடர் தமிழில் உருத்திராக்கமெனத் திரிந்துவந்தது. உருத்திர + அக்கம் = உருத்திராக்கமென தீர்க்கசந்திபெற்றது. திரிபுரங்களை எரித்தகாலத்தில் உருத்திரமூர்த்தி தமது கண்ணைத்திறக்க அதினின்றும் பரந்த நீர்த்துளிகளால் பலமணிகளுண்டாயின. அவற்றிற்கே உருத்திராக்கம் எனப் பெயர்வந்தது என்பர் சித்தாந்த சிகாமணியின் ஆசிரியர். திரிபுரன் என்னும் அரக்கனால் வலியிழந்து வருந்திய பிரமன் முதலிய தேவர்கள் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்ய, சிவபெருமான் உமாதேவியாரோடு எழுந்தருளி அவர்கள் படுந்துன்பத்திற்கிரங்கி அருட்கண்ணால் நோக்க அக்கண்களினின்றும் நீர்த்துளிகள் சிந்தின. அத்தூய்மையான அருள்வடிவாகிய நீர்த்துளிகள் பூமியின்கண்விழுந்து உருத்திராக்க மரமாக முளைத்தன எனவுங்கூறுவர். அம்மரத்திலிருந்து உண்டான காய்களுக்கு உருத்திராக்கம் எனப் பெயர்வந்தது. உருத்திரனுடைய அக்கத்தினின்றும் உதித்தகாரணத்தால் உருத்திராக்கம் எனப் பெயர்பெற்ற மணிகள் கபிலை, வெண்மை, கருமை, பொன்மை நிறமுடையனவாயிருக்கும். இவற்றுள் பொன்மைநிறமுடையது சிவபூசை செய்யும் பரிசுத்தமுடையோரால் அணியப்பெறுவது. இவற்றிற்குப் பலமுகங்களிருப்பினும் ஒன்று முதல் பதினான்கு முகங்களுடைய மணிகள் அணிவதற்கும் ஜபஞ்செய்வதற்கும் சிறந்தனவாகின்றன.

பதார்த்தகுண சாஸ்திர ஆராய்ச்சியுடையார் பலரும் இம்மணியினிடத்தில் (Electri-city) மின்சார சக்தி இருப்பதால் இதனையணிந்துகொள்ளின் இதன்கணுள்ள மின்சாரசக்தி உடம்பின்கண் வியாபித்து ஆரோக்கியத்தையும், பலத்தையும் உண்டாக்குமென்றும், மருந்துடன் சேர்த்துண்டால் அதிதாகம், திரிதோஷம், விக்கல், பித்தரோகம், சிலேத்மம் முதலியவற்றைப் போக்குமென்றும் கூறுவர். இவ்வாறு சுகாதாரமாயினவற்றை மதநூல்களில் புகுத்தினர் என்பதை உணர்வுடையார் பலரும் ஒப்பாமலிரார். இவற்றுள்,—

1. ஒருமுகமுடையது சிவரூபமானது; பெண்கொலைப்பாபத்தைப்போக்குவது. 2. இரண்டு முகமுடையது சிவசத்திசொரூபமானது; பலரோகத்தினை நீக்கும். 3. மூன்றுமுகமுடையது அக்நிசொரூபமானது; ஸ்த்ரீகத்தியைப்போக்கும். 4. நான்குமுகமுடையது பிரமதேவ சொரூபமானது; நரகத்தை நீக்கவல்லது. 5. ஐந்துமுகமுடையது காலருத்திர சொரூபமானது; தகாதவுண்டியாலும், பொய்ம்மை முயக்கத்தாலும் நேரும் தோஷத்தைநீக்கும். 6. ஆறுமுகமுடையது சண்முகக்கடவுளது சொரூபமானது; சிசுகத்தி முதலியவற்றைநீக்கும். 7. ஏழுமுகமுடையது ஆதிசேஷசொரூமானது; கோகத்தியையும், போர்முனையில்முறைதவறிக்கொன்றதோஷத்தையும்நீக்கும். 8. எட்டுமுகமுடையது விநாயகசொரூபமானது: தானம்வாங்குதல், பிறன்கைச் சோறுண்டல், இரப்பவர்க்கில்லையென்றல் முதலியவற்றின் பாபத்தைப்போக்கும். 9. ஒன்பதுமுகமுடையது பயிரவசொரூபமானது; சர்ப்பதோஷத்தை நீக்கும். 10. பத்து முகமுடையது திருமால் சொரூபமானது; நக்ஷத்திராதி கிரகதோஷத்தையும், பைசாசதோஷத்தையும் நீக்கும். 11. பதினொரு முகமுடையது ஏகாதசருத்திர சொரூபமானது; ஆயிரம் அசுவமேதபலனையும், எண்ணிறந்த கோதான பலனையும் கொடுக்கவல்லது. 12. பன்னிரண்டு முகமுடையது துவாதசாதித்தர் சொரூபமானது; பலவகைத்தானமுஞ் செய்வதாலாகிய பலன்களைத்தருவது. 13. பதின்மூன்று முகமுடையது இஷ்டகாமியங்களைத் தரவல்லது. 14 பதினான்கு முகமுடையது சிவசத்தி சொரூபமானது; வானவரும் வாழ்த்துதற்குரிய வாழ்வையும், முத்தியையும் தரத்தக்கது. சிகையில் ஒருமுகமுடையதை ஒன்றாகவும், சிரத்தில் இரண்டு மூன்று பனிரெண்டு முகமுடையவற்றை மும் மூன்றாகவும், தலையில் பதினொரு முகமுள்ளதை

மூப்பத்தாறாகவும், காதில் ஐந்து ஏழு பத்து முகமுடையவற்றை அவ்வாறாகவும், கண்டத்தில் ஆறு எட்டுமுகமுடையவற்றை முப்பத்திரண்டாகவும், மார்பில் நான்கு முகமுள்ளதை ஐம்பதாகவும், புயங்களில் பதின்மூன்று முகமுடையதைப் பதினாறாகவும், முன்கைகளில் ஒன்பது முகமுள்ளதைப் பன்னிரண்டாகவும், பதினான்கு முகமுள்ளதை நூற்றெட்டாகத்தொடுத்து உபவீதமாகவும் தரித்தல்வேண்டும். இங்ஙனம் அணிபவர் வேண்டியவற்றை வேண்டியவாறுபெற்று மகிழ்வரென்பதில் ஐயமின்று. கற்புடை மங்கையர்க்கு மாங்கிலியத்துடன் மஞ்சளும் ஆபரணமும் அவசியம் வேண்டுதல்போல் கற்புடைச்சைவராம் வீரசைவர்க்கு இலிங்கதாரணத்துடன் விபூதிதாரணமும் உருத்திராக்கதாரணமும் அவசியம் தரித்தல்வேண்டுமெண்பது வீராகமத்தின் துணிவாம். இனிபஞ்சாக்கரத்தின் மகிமையைக்கூறுவாம்.

(தொடரும்.)

தென்னாட்டு நிகழ்ச்சிகள்.

---

1. பொம்மபுரம் 17-வது பட்டம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் முதல்வருட மகாகுருபூஜா மகோற்சவம்.

விவ,ஆு மாசி-மீ 4-உ (15—2—29) சுக்கிரவாரத்தன்று ஸ்ரீமத் ஞானராஜதானியான இனம் பொம்மயபாளயம் திருக்கைலாய பரம்பரை பெரியமடம் சிவகஞ்சி மயூராசல நிவாசயதீஸ்வரகர்த்தரான மயிலம் தேவஸ்தான ஆதீன பாம்பரை தர்மகர்த்தத்துவம் இனம்தார் ஸ்ரீசிவஞான பாலையசுவாமிகள் ஆதீனம் 17-வது பட்டம் ஸ்ரீ சுவாமிகளுடைய முதல்வருட குருபூஜை நடைபெற்றது:— காலை 8-மணிக்குள் மாகேஸ்வரர்களும் பக்தர்களுமாகப் பலர் முறைப்படி சந்நிதானத்தைக் கண்டு தரிசித்தார்கள். 10-மணிக்குள் வேதாகமவிதிப்படி மகா அபிஷேக ஆராதனை யாவரும் பேரானந்த முறும்படி நடைபெற்றது. 12-மணிக்குள் அறுசுவையுண்டியுடனும் மாகேசர் ஆராதனை செவ்வனே நடைபெற்றது. சாதிவேற்றுமையின்றி வந்தவர் யாவருக்கும் உணவளிக்கப்பெற்றது. மாலை 7-மணிக்குமேல் அடைந்த சுவாமிகளுடைய திருவுருவப்படம் சிறப்புடன் பட்டினப்பிரவேசம் செய்யப்பெற்றது. பின்னர் பண்ணுருட்டி திரு. மணிசுப்பிரமணிய ஐயர் அவர்களும், புதுவை, திரு. இரேவணசித்தையர் அவர்களும் தாம்

பாடிய தோத்திரப்பாக்களைச் சந்நிதானத்தில் அரங்கேற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். முடிவில் இப்பொழுது பீடத்தின் அதிபதியாக விளங்கும் ஸ்ரீ சுவாமிகள் பாக்களைப் பாராட்டியதுடன் மகாசந்நிதானத்தின் மகத்துவத்தைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இன்னோசைபயக்கத் திருவாய் மலர்ந்தருளி வீரசைவம் என்னும் பத்திரிகையின் ஆவசியகத்தை எடுத்துக்கூறி யாவரும் ஆதரிக்கவேண்டுமெனப் பாராட்டினார்கள். இந்த சுவாமிகள் தென்மொழி வடமொழிகளில் வேண்டிய ஆராய்ச்சியும், உபந்நியசிக்குந்திறமும் விருப்பமும், மேற்கொண்ட காரியங்களைக்குறித்த அளவில் செய்துமுடிக்கும் ஆற்றலும் ஊக்கமும உடையவர்களாக விளங்கலின் இவர்கள் காலத்தில் பல நன்மைகள் உண்டாதல் கூடுமென வீரசைவ சமூகத்தாரும் பிறரும் மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கின்றார்கள். சுபம்.

——(o)——

2 கும்பகோணம் ஸ்ரீ சாரங்கதேவர் பெரியமடம்.

இந்த மடாலயத்தின் காரியங்களையும், விவகாரங்களையும் திருச்சிராப்பள்ளி திருவாளர், அ. க. பசுவண்ண செட்டியாரவர்கள் ஊக்கத்துடன் கவனித்துவருகின்றார்கள். இம்மடாலயத்தின் விவகாரங்கள் கோர்ட்டில் இருந்துவருகின்றன. இப்பொழுது இம்மடாலயத்தின்கண் ஸ்ரீமந் மஞ்சுளஹ்ருத்கஞ்ச கிஞ்சல்க புஞ்சரஞ்சித ராஜசூடாமணி ராஜேஷ்ட லிங்கபூஜாலோல தேவதேசிக சிகாமணி ஸ்ரீவிருத்த காசிப்பிரபு மடாத்தியக்ஷ ஸ்ரீ சித்ரகல்துருக சின்மூலாத்ரி பிரஹன் மட மகாசமஸ்தான காசாசர மூர்த்திகளாகிய ஸ்ரீமுருகபசவதேசிகேந்திர சுவாமிகள்எழுந்தருளி மடாலயத்தை அலங்கரித்துக்கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

---

3. நமது மகாசங்கத்தின் தலைவரின் தேகநிலை.

நமது தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த மகாசங்கத்தின் தலைவராகிய திருவாளர் ஆ. பொன்னுசாமி ஐயர் அவர்கள் சிதம்பரத்தில் ஒரு மாதகாலமாக நோய்வாய்ப்பட்டு அசக்தர்களாக இருக்கின்றார்கள். இவர்கட்கு இப்பொழுது வயது 60. நமது சமூகத்தில் முதலில் தமிழுடன் ஆங்கிலமும்படித்து உத்தியோகத்திலிருந்து சமயாசாரத்தில் வழுவாதிருப்பவர்கள் இவர்களே. இவர்கள் தம் தேகநிலையைநோக்கி சிதம்பரத்தில் தமக்குள்ள வீடு நிலம் பொருள்களை சிவப்பிரகாசசுவாமிகள் குருபூசையையும், ஆனி மார்கழி மாதங்களில் தரிசனத்திற்கு

வரும் வீரசைவமாகேச சமாராதனையையும் நடத்துவதற்கு உபயோகப்படும்படி உயில் எழுதிவைத்திருப்பதாகத் தெரியவருகிறது. இவர்கள் நோயினின்றுநீங்கிக் குணமடைந்து சிலவருடமாவது சுகவாழ்விலிருக்கவேண்டுமென வீரசைவ சமூகத்தார் இறைவனருளை வேண்டுகின்றார்கள்.

4. நாமகிரிப்பேட்டை வீரசைவ ஜங்கமர்களும் மகாசிவராத்திரி மகோற்சவமும்.

சேலம் ஜில்லா இராசிபுரம் தாலூகா நாமகிரிப்பேட்டை கடைத்தெருவில் தம்பையர் மாடிவீட்டில் அமைத்திருக்கும் ஸ்ரீபஞ்சாசாரிய நிலையத்தில் விபவ-ஹூ மாசி-ஸ்ரீ 26-உ (9–3–29) சனிக்கிழமைஇரவு மகாசிவராத்திரி மகோற்சவமும், ஸ்ரீ ஜகத்குரு காசிவிஸ்வராத்தியர் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசைலம் பண்டிதாராத்தியர் ஜயந்தி மகோற்சவமும், சிவலிங்காபிஷேகாராதனைகளும், மறுநாள் காலை கணாராதனைமுதலிய சந்தர்ப்பணங்களும், மாலை 3 மணிக்கு ஸ்ரீ பஞ்சாசாரியர் திருவுருவப்படத்தின் ஊர்வலக்காட்சியும் சிறப்பாக நடைபெறுமாதலின் வீரசைவ பக்த மாஹேசர்களனைவரும் விஜயஞ்செய்து தரிசன பூர்வகமான சிரவணானந்தத்தையடையும்படி நாமகிரிப்பேட்டை வீரசைவஜங்கமர்கள் கோருவதாக சேலம் குகை திரு. குருசாமிஐயர் என்னும் மதாபிமானியார் தெரிவிக்கின்றனர். இந்த ஜங்கம பக்தர்கட்கு இக்காலத்தில் வீரசைவ சமயாபிமானமும், ஆசாரிய பக்தியும் உண்டாயிருப்பதைக் கேட்க மிகவும் மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. யாவரும் இக்காட்சியைக் கண்டின்புறுவார்களாக.

5 பாராட்டுதல்.

கும்பகோணத்திலிருக்கும் திருவாளர் R. வேலாயுத ஐயர் அவர்கள் நமதுபத்திரிகைக்கு ஆயுட்சந்தாதாரராகச்சேர்ந்து ரூ 25 கொடுப்பதாக வாக்களித்துக் கையொப்பமிட்டிருப்பதாக வேதாரணியம் வட்டகைப் பொறுப்பாளர் திரு. S. கந்தசாமி ஐயர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இவ்விருவர்களுடைய சமயாபிமானமும் பத்திரிகையின் ஆதரிப்பும் பாராட்டற்பாலன. இத்தகைய உதவியை மற்றவர்களும் மேற்கொள்வார்களென நிறைவேற்றுக்கழகத்தார் நன்றியறிதலுடன் எதிர்பார்க்கின்றனர்.

வீரசைவம்.

புரவலர் :—

பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அவர்கள்.

நிறைவேற்றக் கழகத்தார் :—

க. திருவாளர் ஆ. பொன்னுசாமி ஐயரவர்கள், சிதம்பரம்.
உ. ,, C. வைத்திலிங்க ஐயரவர்கள், பெருவளகல்லூர்.
ந. ,, சிவப்பிரகாச ஐயரவர்கள், அரும்பாவூர்.
ச. ,, S. வேலாயுத ஐயரவர்கள், சொரத்தூர்.
ரு. ,, V. குமாரவீரய்யர் அவர்கள், முசிரி.

பாத்திராசிரியர் :— வீ. குமாரவீரய்யர்.

கட்டுரையெழுதிக் காப்பதாக வாக்களித்துள்ள ஆசிரியர்கள்.

திருவாளர் G. C. வீரப்பா B A., L. L. B, அவர்கள்,
வழக்கறிஞர், பெங்களூர்.

,, உருத்திரசாமி ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
ஸ்ரீமத் ஞானியார் பாடசாலை, திருப்பாதிரிப்புலியூர்.

,, பண்டிதர், ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள்,
பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்,
திரிசிரபுரம்.

,, பண்டிதர், அ. கந்தசாமி பிள்ளையவர்கள், கவர்ன்மெண்டு காலேஜ் தமிழ் விரிவுரையாளர், கும்பகோணம்.

,, ஏகாம்பர ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
பச்சையப்பர் உயர்தர கலாசாலை, காஞ்சீபுரம்.

,, வித்துவான் அ. வரதநஞ்சய பிள்ளை அவர்கள்,
ஸ்ரீகருணீக புராண நூலாசிரியர், ஜலகண்டபுரம்.

சந்தாநேயர்கட்கோர் விண்ணப்பம்.

ஐயன்மீர் !

நமது வீரசைவத்தின் மூன்றாவது இதழ் இப்பொழுது வெளி வருகின்றது. பத்திரிகை நடத்துவதில் பற்பலவேலைகள் உண்டென்பதை யாவரும் அறிவர். இதன் சம்பந்தமான தொண்டினைச்செய்து வரும் ஆசிரியரும் நிறைவேற்றற் கழகத்தார்களும் தனித்தனி கட்டுப்பாடான ஒவ்வோர் உத்தியோகத்திலமர்ந்தவர்களாக இருத்தலின் சந்தா நேயர்கள் அதிகமான வேலையைக் கொடுக்காது 4-வது இதழ் வெளிவருவதற்குள் தனியாகவாவது சிலர் சேர்ந்தாவது சந்தாத் தொகை ரூ. 2—0—0-ம் மணிபார்டர் மூலமாகக் கூடியவிரைவில் அனுப்பிவைப்பார்களாயின் பேருபகாரமாகுமென இதன்காரிய நிர்வாகிகள் வேண்டுகின்றார்கள். அபிஷேகமாலையுரை முதலியன அடுத்த இதழில் வரும்.

ப-ர்.

விளம்பரம்.

வாலாஜா நகரிலுள்ள வீரசைவராகிய மகா-ா-ா-ஸ்ரீ K. S. மல்லப்ப செட்டியார் அவர்கள் தக்க குடும்பத்திலுள்ளவர்கள். சமயாபிமானத்திற் சிறந்த நோக்கமுடையவர்கள். இவர்கள் நீண்டகாலமாக மதிப்புடனும் நாணயமாகவும் வியாபாரஞ்செய்துவருகின்றார்கள். இவர்கள் தங்கத்தாலும், வெள்ளியாலும் சிவலிங்கப் பெருமானை எழுந்தருளச்செய்து தரித்துக்கொள்ளுதற்குரிய அழகிய வடிவில் வேண்டியமாதிரி வேண்டியஇடையில் செச்சை (பெட்டகப்) செய்தனுப்பிவருகின்றார்கள். வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம் :—

K. S. மல்லப்ப செட்டியார்,

வெள்ளி செச்சை பிரம்புப்பெட்டி வியாபாரம்,

சூநணசெட்டி வீதி, வாலாஜாநகர்.

சந்தா விவரம்.

ஆயுட் சந்தா முன்பணம் :—	...	25—0—0
ஆண்டுச் சந்தா :—	...	2—0—0
மாணவர்கட்கு :—	...	1—8—0
தனியிதழ் :—	...	0—4—0